**Dated : 16.07.2026** (நேரம் : மதியம் 01.05 மணி)

**MCOP. No: 44/2025**

**ம.சா. 1 திரு. அப்துல் மாலிக்**

(சாட்சி 3ம் தளத்திலுள்ள இந்நீதிமன்றத்திற்கு வரமுடியாத காரணத்தினால் தரைதளத்தில் உள்ள E–Sewa Kendira அறையில் அமர வைக்கப்பட்டு Video conference மூலம் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறார்.)

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என் அப்பா கொடுத்த புகாரை படித்து பார்த்துள்ளேன். சம்பவம் இராமநாதபுரம்–ஏர்வாடி இசிஆர் ரோட்டில் நடந்தது. அந்த ரோடு தென்வடலாக செல்லும் சாலையாகும். அந்த சாலையில் இரண்டு கனரக வாகனங்கள் எதிர் எதிரே செல்லமுடியும் என்றால் சரிதான். விபத்தன்று நான் இராமநாதபுரத்திலிருந்து ஏர்வாடி நோக்கி சென்றேன். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றேன். அப்போது 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எனக்கு எதிர் திசையில் வந்தது. நான் எனக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முயன்றபோது சாலையின் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் விபத்து சம்பந்தப்பட்ட தோராய வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அதிவேகமும் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு நான் முதன் முதலில் மதுரை, ப்ரீத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு முழு சிகிச்சை முடிந்துதான் நான் Discharge செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் எதற்காக லெட்சுமி

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.16 17:36:53 +0530

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் கையில் பொறுத்தப்பட்டிருந்த பிளேட்டை அகற்றுவதற்காக அங்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அந்த பிளேட்டை அறுவை சிகிச்சை செய்து அகற்றுவதற்கான மருத்துவ வசதி மதுரை, ப்ரீத்தி மருத்துவமனையில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் என்னிடம் போதிய வசதியில்லாததால் நான் அங்கு போகவில்லை. லெட்சுமி மருத்துவமனையிலும் மருத்துவச்செலவு செய்து தான் பிளேட் அகற்றப்பட்டது என்றால் சரிதான். எல்லா அரசு மருத்துவமனையிலும் இலவசமாக அறுவை சிகிச்சை செய்து பிளேட்டை அகற்றுவதற்கான வசதி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. லெட்சுமி மருத்துவமனையில் நான் 02.03.2026 முதல் 06.03.2026 வரை சிகிச்சை பெற்றேன். ம.சா.ஆ.6 பில்களில் 30.06.2026ம் தேதி எனக்கு சிகிச்சை வழங்கப்பட்டதாக பில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அதனை வழங்கிய தேதியாக 15.03.2026 என தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 வரிசை பில்களில் உள்ள தொகை ம.சா.ஆ.3 வரிசை பில்களில் அடங்கும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3–ல் உள்ள தனித்தனி பில்கள் கடைசியாக சேர்க்கப்பட்டுள்ள மொத்த பில்லில் அடங்கும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 வரிசை பில்களில் அட்வான்ஸ் தொகை கணக்கீடப்பட்டுள்ளது என்றும், அவை சரிசெய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முன்பு நான் பழக்கடையில் வேலை செய்து மாதம் ரூ.20,000/– வருமானம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சைக்கு பிறகு எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், எனக்கு எந்தவித ஊனமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது நான் எல்லா வேலையும் செய்யக்கூடிய தகுதியான நபர் என்றால் சரியல்ல. மனுவில் நான் பல்வேறு

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.16 17:36:58 +0530

தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.16 17:37:03 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.